செ.வெ.எண்:325 நாள்:18.05.2018

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 20.05.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் மற்றும் பிற்பகல் Combined Engineering Services Examination (CESE) போட்டித் தேர்வு திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி மையத்தில் 12 கல்வி நிலையங்களில் (14 Halls) நடைபெற உள்ளது. மேற்படி தேர்வினை 4,135 நபர்கள் எழுத உள்ளார்கள். இத்தேர்வினை கண்காணிக்க வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர் நிலையில் 3 சுற்றுக்குழு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தேர்வு மையங்களில் தேர்வினை வீடியோ கேமரா மூலம் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேர்வு நாளன்று தடைபடாத மின்சாரம் வழங்கவும், பேரூந்துகளை தேர்வு மையத்திற்கு சீராக இயக்கக்கேட்டும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிடப்பட்டுள்ளது. தேர்வு நடைபெறும் கல்வி நிலையங்களுக்கு காவல் துறை மூலம் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தேர்வு எழுதுவோர் தங்களின் தேர்வு மையங்களை கண்டறிந்து முன்கூட்டியே தேர்வு எழுத வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், தேர்வு அறையினுள் செல்போன்களை எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு எழுதுபவர்கள் தவிர இதர நபர்கள் தேர்வு மைய வளாகத்திற்குள் செல்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கிறார்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.